# இலங்கையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான இழப்பீடு

இழப்பீட்டின் ஆங்கிலப் பதமான ரெபரேஸன்; (Reparation) லத்தின் மொழியின் ரெபரோ; (Reparo) என்ற வார்த்தையில் இருந்து உருவானதாகும்

இந்தச் செயல் ஆனது சீர்செய்தல் அல்லது சரி செய்தல், மீட்டமைத்தல் ஆகும்

## இழப்பீடு என்றால் என்ன?

இழப்பீடு எனப்படுவது ஒருவர் செய்த தவறுக்கான அல்லது இன்னொருவருக்கு இழைத்த தீங்கிற்காக வழங்கப்படும் ஒரு வகையான நஷ்டஈடு ஆகும். அரசாங்கத்தினால் யுத்தத்தின் போது இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள், பாரதூரமான குற்றங்கள் மற்றும் துஸ்பிரயோகங்களுக்காக தமது தவறை திருத்திக்கொள்ள பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படுவதே இழப்பீடு ஆகும்

தனி நபர்களுக்கும் சமூகங்களுக்கும் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களைச் சரி செய்வதோடு பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள் மீறப்பட்டமையினால் ஏற்படுத்தப்பட்ட தாக்கங்களை அரசிற்கு தெரியப்படுத்தி அவர்களுக்கான இழப்பை நிவர்த்தி செய்வதே இழப்பீட்டின் நோக்கமாகும்

பாதிக்கப்பட்டவருக்கு ஏற்படுத்தப்பட்ட தீங்கிற்கு வழங்கப்படக்கூடிய பணரீதியான நஷ்டஈடு ஆனது அவர்களுக்கு இழைக்கபட்ட மீறல்களின் தாக்கத்தின் தன்மையில் தங்கியுள்ளது.

## இழப்பீட்டின் வகைகள்

### நஷ்டஈடு

### மீளக்கையளித்தல்

அத்துமீறல்கள் இடம்பெறுவதற்கு முன்னர் இருந்ததான பழைய நிலைக்குத் திரும்புதல்

**திருப்பிக்கொடுத்தல்**

- குடியுரிமை
- வேலைவாய்ப்பு
- குடியிருப்பு
- நிலம்

### திருப்தி

**குறியீட்டு ரீதியிலான இழப்பீடுகள்**

- பொது மன்னிப்பு
- நினைவுகூறுவதற்கான தேசிய நாள்
- பாதிக்கப்பட்டவர்களின் பெயரில் வீதிகளுக்கு பெயர் வைத்தல்
- நினைவுச்சின்னங்கள் மற்றும் தூபிகளை நிறுவுதல்
- அருங்காட்சியகம் மற்றும் நினைவுப்பூங்கா வைத்தல்

### புனர்வாழ்வு

**பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கு ஏற்படுத்தப்பட்ட சேவைகள்**

- மருத்துவம் மற்றும் உளவியல் பராமரிப்பு
- சட்டம் மற்றும் சமூக சேவை
- பொருளாதார உதவி

### மீண்டும் நிகழாது என்பதற்கான உத்தரவாதம்

**அரச துறைகளின் மறுசீரமைப்பு**

- நீதித்துறையை பலப்படுத்தல்
- சட்டம் மற்றும் பாதுகாப்பு

*Extracted from* https://www.ohchr.org/en/professionalinterest/pages/remedyandreparation.aspx -



## தனிப்பட்ட இழப்பீடுகள்

குறிப்பிட்ட பாதிக்கப்பட்ட நபர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட குறிப்பிட்ட தீங்குகளை தனிப்பட்ட இழப்பீடுகள் இனங் கண்டுகொள்கின்றது. பாதிக்கப்பட்டவர்கள் எனப்படும் போது இன்னுமொரு நபர்களுக்கு இழைக்கப்பட்ட குற்றத்திற்காக தனிப்பட்ட நபர்கள் மறைமுகமாக பாதிப்புக்கு உள்ளாக்குதல். (உதாரணம்: குடும்ப உறுப்பினர்கள் )



## கூட்டு இழப்பீடுகள்

கூட்டு இழப்பீடானது மீறல்களினால் உண்டாகின்ற காரணங்களாலும் , விளைவுகளாலும் ஒரு பகுதி மக்கள் அல்லது ஒரு சமூக மக்கள் அல்லது யாரெல்லாம் ஒரேவிதமான அடையாளத்தினைக் கொண்டு இருக்கின்றார்களோ அல்லது ஒரே விதமான மீறல்கள் பற்றிய அனுபவத்தினைக் கொண்டு இருக்கின்றார்களோ அவர்கள் எவ்வாறு பாதிப்புக்கு உள்ளாகின்றனர் என்பதனை அடையாளப்படுத்துகின்றது



## நீதித்துறை இழப்பீடு

குற்றம் இழைத்தவர்களுக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின் கீழாகவோ கீழாகவோ குடியியல் சட்டத்தின் கீழாக இழப்பீட்டினைக் கோர முடியும்



## நிர்வாகத்துறை இழப்பீடு

தனிநபர்களும் கூட்டுப்பரிமாணங்களும் தீங்குகளுக்கு உள்ளாக்கபட்டமையையும், பரவலான மீறல்களுக்கு உள்ளாக்கப்பட்டமையையும் நீதி துறையைவிடவும் விரிவாகவும், முழுமையாகவும் அறியப்படுத்துகின்றது. உதாரணம்: வீட்டுத்திட்டம் காணி, மீளக்கையளித்தல், திருப்தி, புனர்வாழ்வு மற்றும் மீள நிகழாது என்பதற்கான உத்தரவாதம்

# இழப்பீடுகள் வழங்கப்படுவதற்கான முக்கியத்துவம் என்ன?



இழப்பீடானது நம்பிக்கையை கட்டியெழுப்புவதன் மூலமாக ஒரு நிலையான சமாதானத்தை அரசில் நிலை நிறுத்தி அத்திறன் மீதாக மனித உரிமையை பாதுகாத்து மேல் நிறுத்துவதோடு அதன் பங்களிப்பினையும் வழங்குகின்றது



இழப்பீடானது பாதிக்கப்பட்டவர்களுக்கான உரிமைகள் மீறப்பட்டமையை நிவர்த்தி செய்வதற்கு முயற்சிக்கின்றது




பாதிக்கப்பட்டவர்கள் உடல் ரீதியானதும், மனரீதியானதும் மற்றும் தமது கௌரவத்தினை மீளக்கொண்டு வருவதற்கு பொருள் ரீதியான உதவி மற்றும் குறியீட்டு ரீதியான அங்கீகாரத்தினை வேண்டி நிற்கின்றனர்



மீறல்களினால் பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு தீர்வு ஒன்றினைப் பெறுவதற்கு உரிமை உள்ளது என உள்நாட்டுச் சட்டம் மற்றும் சர்வதேசச் சட்டம் வலியுறுத்துகின்றது



பாதிக்கப்பட்டவர்களின் கட்டாயத் தேவைகளினை அரசு முன் நிறுத்துவதானது பாதிக்கப்பட்டவர்களுக்கு தீர்வை வழங்குவதற்கு அரசு அர்ப்பணிப்பாக உள்ளது என்பதனை விளக்கமளிப்பதோடு பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசின் மீதான நம்பிக்கையை மேலும் வலுவூட்டுகின்றது



இழப்பீடானது சமூக ஒற்றுமையை கட்டியெழுப்புவதோடு மட்டுமல்லாது நாட்டின் நீண்டகால ஸ்திரத்தன்மைக்கு பங்களிப்பு செய்கின்றது

# இழப்பீட்டிற்கான அலுவலகம்
*அக்டோபர் 2018ல் ஸ்தாபிக்கப்பட்டது*

## கட்டளை மற்றும் பங்கு

அதிகளவில் பாதிப்படைந்தவர்களை இனம்கண்டு அவர்கள் இழப்பீடு வழங்கப்படுவதற்கு உரியவர்களா என ஆராய்ந்து அவர்களுக்கு பொருத்தமான இழப்பீட்டை வழங்குதல்

ஆயுத போராட்டத்தாலும், அரசியல் ஸ்திரத்தன்மையின்மையாலும், மக்கள் வன்முறைகளாலும் அவர்களது வாழ்க்கையை இழந்தவர்களுக்கும் அல்லது தங்கள் நெருங்கியவர்களையோ அல்லது சொத்துக்களையோ இழந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடானது வழங்கப்படுதல் வேண்டும்

பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அவர்களை பிரதிநிதித்துவம் செய்பவர்களுக்கு நேரடியாக விண்ணப்பம் கிடைக்கச்செய்தல்

இழப்பீட்டினை பெற்றுக்கொள்வது தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தகவல்களையும், அறிவுரைகளையும் வழங்குதல்

இழப்பீடுக்கான கொள்கைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் பரிந்துரைகளை வகுத்தல். நிர்வாக, உட்கட்டுமான, உளரீதியான ஆதரவொன்றைப் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குதல்

பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய பாதுகாப்பினை வழங்குதல்

இழப்பீட்டுக்கான கொள்கைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் பரிந்துரைகளை வகுத்தல். நிர்வாக , உட்கட்டுமான, உளரீதியான ஆதரவொன்றைப் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குதல்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு படிவங்களை எளிதாகக் கிடைப்பதற்கு உதவி செய்தல்

## பால்நிலை சார்ந்த இழப்பீட்டு கொள்கை ஏன் முக்கியமாகும்?

பெண்கள் முரண்பாடுகளுக்கு முன்னரும் பின்னருமான நிகழ்வுகளில் குடும்பத்தினைப் பராமரிப்பதற்கு முழு பொறுப்பையும், சுமையையும் ஏற்றுக்கொள்ளுகின்றார்கள்

ஆதலால், இழப்பீட்டுச் செயல்முறையை பெண்கள் தமதாக்கிக்கொள்வதோடு பாதிக்கப்பட்ட ஆண்களுக்கும் பெண்களுக்குமான உரிய அங்கீகாரம் வழங்கப்படுகின்றது

ஆண்களிலிருந்து பெண்கள் வேறுபட்ட வகையில் மனித உரிமை மீறல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள்

ஆண்களை விடவும் அரசியல் ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் வன்முறைக்கு ஆளாக்கபட்டவர்கள், மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டும் பொருளாதார ரீதியாக மிகவும் கீழ் நிலைக்குத் தள்ளப்பட்டும் உள்ளனர்

கணவனை இழந்த பெண்ணாயின் சமூகத்தில் இருந்து ஒதுக்கிவைக்கப்பட்டு அல்லது அவர்களது குடும்பத்தில் இருந்து கைவிடப்படுகின்றனர்

இதன் காரணமாக கடந்த காலத்தில் இடம்பெற்ற துஷ்பிரயோகங்களுக்கும், அத்துஷ்பிரயோகத்தால் உண்டான தாக்கங்களுக்கும் பால்நிலையைச் சார்ந்த புரிந்துணர்வைக் கொடுக்கின்றது.

## இழப்பீட்டின் மீதான பெண்களின் பங்களிப்பை அரச உத்தியோகத்தர்கள் எவ்வாறு எளிதாக்க முடியும்?

- இழப்பீட்டுச் செயன்முறையை இலகுபடுத்துவதற்காக, சமூகமட்ட தகவல்களை இழப்பீட்டிற்கான அலுவலகத்திற்கு வழங்குதல்
- உள்ளூர் மொழிகளில் தேவையான தகவல்களைத் தெரியப்படுத்துதல்
- பாதிக்கப்பட்ட பெண்கள், குழந்தைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் தேவைகளினை மிகவும் கூர்வுணர்வுடன் கையாளுதல்
- பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு சம்பந்தமாக பரிந்துரை செய்வதற்கு தரவுத்தளம் ஒன்றை பேணி வருதல்
- இழப்பீடுக்கு விண்ணப்பித்த விண்ணப்பம் சம்பந்தமான நிலையை அல்லது வினவல்களை பாதிக்கப்பட்டவருக்கு அல்லது அவர்களது பிரதிநிதிகளுக்குத் தெரியப்படுத்துதல்
- பாதிக்கப்பட்டவருக்கு, நிறுவனங்களுக்கு, அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குதல்

## இழப்பீட்டு அலுவலகத்திற்கான மாவட்ட ரீதியிலான கிளைகள்



### யாழ்ப்பாணம்
புனர்வாழ்வு உதவியாளர்
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்
தொலைபேசி: (94) 777 910 856 | (94) 212 283 966
தொலைநகல்: (94) 212 222 355

### முல்லைத்தீவு
புனர்வாழ்வு உதவியாளர்
மாவட்டச் செயலகம்
தொலைபேசி: (94) 772 791 200 | (94) 242 290 037 / 290 033
தொலைநகல்: (94) 242 290 045

### கிளிநொச்சி
புனர்வாழ்வு உதவியாளர்,
கிளிநொச்சி மாவட்டச் செயலகம்,
தொலைபேசி: (94) 777 910 856 | (94) 212 285 351
தொலைநகல்: (94) 212 283 966 / 283

### திருகோணமலை
புனர்வாழ்வு உதவியாளர்
மாவட்டச் செயலகம்
தொலைபேசி: (94) 774 670 310 | (94) 262 227 027
தொலைநகல்: (94) 262 222 305 / 050 905

### மன்னார்
புனர்வாழ்வு உதவியாளர்
மாவட்டச் செயலகம்
தொலைபேசி: (94) 774 171 244 | (94) 232 250 133
தொலைநகல்: (94) 232 222 232

### மட்டக்களப்பு
புனர்வாழ்வு உதவியாளர்
மாவட்டச் செயலகம்
தொலைபேசி: (94) 772 855 183 | (94) 652 223 151
தொலைநகல்: (94) 652 224 466

### வவுனியா
புனர்வாழ்வு உதவியாளர மாவட்டச் செயலகம்
தொலைபேசி: (94) 774 927 544 |
(94) 242 222 212
தொலைநகல்: (94) 242 222 212

### அம்பாறை
புனர்வாழ்வு உதவியாளர்
மாவட்டச் செயலகம்
தொலைபேசி: (94) 771 319 643 |
(94) 632 223 904
தொலைநகல்: (94) 632 222 130 / 223 90

### இழப்பீட்டுக்கான அலுவலகம்
408, காலி வீதி, கொழும்பு 03
மின் அஞ்சல்: ofrsrilanka2018@gmail.com
தொலைபேசி: (94) 112 575 803 | (94) 112 575 813
தொலைநகல்: (94) 112 575 815


IOM UN MIGRATION

Centre for Equality and Justice

சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம்
(Centre for Equality and Justice)
325ஏ1, திம்பிரிகஸ்ஸாய வீதி, கொழும்பு-05, இலங்கை.
மின்னஞ்சல்: info@cejsl.org
இணையதளம்: www.cejsrilanka.org

/Centre-for-Equality-and-Justice
/CEJ_SriLanka
/cej_srilanka
/CEJ Sri Lanka